★ இந்திய விமானப்படையின் பலத்த கணகாணிப்புக்கு மத்தியில்

# 'மிருஜ்' பாதுகாப்புடன் ஹெலிகள் வந்தன

திரு. பிரபாகரனை இங்கிருந்து அழைத்துச்செல்ல இரண்டு பாரிய ஹெலிகப்டர்கள் வந்த அதே சமயத்தில, தென்னிந்தியக் கரையில் மூன்று "மிருஜ் 2000" யுத்த விமானங்கள் தயார் நிலையில் வட்டமிட்டுக்கொண்டிருந்தன. அதேசமயம் வேறு ஐந்து ஹெலிகப்டர்கள் பாக்குநீரிணையின் கடல் எல்லையில் சுற்றிக்கொண்டு நின்றன அதுமட்டுமன்றி மேலும் பல இந்திய யுத்த விமானங்கள் எதற்கும் தயாராக தஞ்சாவூரில் நிறுத்தப்பட்டிருந்தன. பிரபாகரனை ஏற்றிச்சென்ற ஹெலிகப்டர் மிகவும் 'அலட்சியமாக' பலாலி விமானநிலையம், ராணுவமுகாம் ஆகியவற்றின் மேலாகத் தாழப் பறந்து, சுமார் ஐநூறு அடிக்கும் குறைவான உயரத்திலேயே சென்றது. பாக்குநீரிணை எல்லையில் இந்த ஹெலி சென்றதும் மேலும் இரு ஹெலிகள் இதனுடன் சேர்ந்துகொண்டன.

விலை ரூபா 1 25

REGISTERED AS A NEWSPAPER

முரசொலி

தேசிய தமிழ்த் தினசரி

MURASOLI

முரசு 1 ஒலி 240 சனி 25 - 07 - 1987 ( ஆடி 9 ) ஜுலை 28

★ சுதுமலையிலிருந்து நேற்று முற்பகல் இந்திய விமானப்படையின் விசேஷ ஹெலிகப்டரில் பூரி, குப்தா சகிதம் சென்னைக்குச் சென்ற

# பிரபாவுடன் கிட்டு, அன்ரனும் விமானத்தில் டில்லி சென்றனர்


## ராஜீவை நேற்றிரவே சந்திக்க ஏற்பாடு

பிரதமர் ராஜீவ் காந்தியின் விசேஷ அழைப்பின்பேரில், இந்திய விமானப்படையின் ஹெலிகப்டரில் நேற்றுக் காலை சுதுமலையிலிருந்து சென்னைக்குச் சென்ற விடுதலைப் புலிகளின் தலைவர் திரு வே. பிரபாகரன், அங்கிருந்து இந்திய விமானப்படையின் 'போயிங்' விமானமொன்றில் நேற்று மாலையே புதுடில்லிக்குச் சென்றார். அதற்குமுன்னர் தமிழக முதல்வர் எம். ஜி. ஆரை அவரது இல்லத்தில் சந்தித்துச் சுமார் அரைமணி நேரம் அந்தரங்கப் பேச்சு நடத்தினார். திரு பிரபாகரனுடன், இயக்க ஆலோசகர் திரு அன்ரன் பாலசிங்கமும், யாழ்ப்பாண முன்னாள் தளபதி திரு கிட்டுவும டில்லி சென்றனர்.

இந்திய தூதரகச் செயலர் திரு. எச். எஸ் பூரி, தூதரக பாதுகாப்புச் செயலர் கப்டன் குப்தா ஆகியோருடன் இங்கிருந்து ஹெலியில் சென்ற திரு. பிரபாகரன் திருச்சி விமான நிலையத்தில் சென்று இறங்கியபோது அங்கு பலத்த பாதுகாப்பு அளிக்கப்பட்டிருந்தது அதேவேளையில் புலிகள் இயக்கப் பிரமுகர்கள் பலரும் அவரை வரவேற்கச் சென்றிருந்தனர்.

நேற்றுக் காலை கொழும்பிலிருந்து புறப்பட்ட தூதர் டிக்ஸிற் நேராகப் புதுடில்லி

—6 ஆம் பக்கம் பார்க்க



பிரபாகரனை கூட்டிச்செல்லவென இந்தியாவிலிருந்து விசேஷமாக வந்திருந்த பாரத விமானப்படையின் ஹெலிகப்டர் இது ஏவுகணைகள் பொருத்தப்பட்ட இந்தக் கரும்பச்சைநிற ஹெலியை விமானப்படையின் அதிசிரேஷ்ட இரு பைலட்டுகள் ஓட்டிவந்தனர் சுதுமலை அம்மன்கோவில் முன்றலில் ஹெலி பிரபாகரனின் வருகையை எதிர்பார்த்து நின்றபோது எமது படப்பிடிப்பாளர் ஆனந்தி எடுத்த படம்.

## ஹெலிமேலெழும்பும்போது பிரபா வாழ்க என கோஷம்

(அலுவலக நிருபர் எஸ். பிரேமானந்)

விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரனை ஏற்றிச் செல்லவென வந்த இந்திய விமானப்படை விமானங்கள் தரையிறங்குவதற்கென சுதுமலை அம்மன் கோவிலுக்கு முன்பாக உள்ள வயல் வெளியில் நேற்று அதிகாலையே விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்த வயல் வெளிகளில் உள்ள வரம்புகள் வெட்டி மட்டப்படுத்தப்பட்டிருந்தன. காற்றின் வேகத்தை முற்கூட்டியே தெரிவிக்கும் காற்றுமானி ஒன்றும், விசேட சமிக்ஞை விளக்குகளும் அங்கு விடுதலைப் புலிகளினால் அமைக்கப்பட்டிருந்தன.

—6 ஆம் பக்கம் பார்க்க

## பிரபாவின் நிபந்தனை

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான பேச்சுக்களை தொடர்வதற்கு முன்னர் சில முன் நிபந்தனைகளை விதிக்க தாம் தீர்மானித்திருப்பதாக விடுதலைப் புலிகளின் தலைவர் திரு பிரபாகரன் நேற்றுத் தெரிவித்தார். வடமராட்சிப்பகுதியில் அண்மைய தேடுதல் நடவடிக்கைகளின்போது மேலதிகமாக அமைக்கப்பட்ட இராணுவ முகாம்களை அரசு மூட வேண்டும் என்பது இந்த நிபந்தனைகளில் முக்கியமான ஒன்றாக இருக்கும் என அவர் தெரிவித்தார்.

## டிக்ஸிற் ராஜீவுடன் பேச்சு

தூதுவர் ஜே என். டிக்ஸிற் நேற்று மாலை இனப்பிரச்சினை சம்பந்தமான பேச்சுக்களை புதுடில்லியில இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியுடன் நடத்தினார்



விடுதலைப்புலி வீரர்கள் இருமருங்கிலும் சூழ்ந்துவர புலிகளின் தலைவரும் பிரதம தளபதியுமான திரு. பிரபாகரனை இந்திய தூதரக பாதுகாப்பு ஆலோசகர் கப்டன் குப்தா கை கோர்த்து ஹெலிகப்டருக்கு அழைத்துச்செல்லும் இக்காட்சி நேற்றுக் காலை சுதுமலையில் இடம்பெற்றது

## அம்மனின் புதுமை!

சரியாக இரண்டு மாதங்களுக்கு முன்னர், கடந்த மே மாதம் 25-ம் திகதி ஆறு பொம்பர்கள் குண்டுவீசி குருக்கள் உட்பட ஆறு பக்தர்களைக் கொலைசெய்த சுதுமலை அம்மனின் வாசலிலேயே நேற்று சமாதானத்தீர்வுக்கான பயணமும் ஆரம்பமானது

அன்று விமானங்கள் குண்டு வீசி, அம்மன் உற்சவத்தை நிறுத்தின. அதே அம்மனே நேற்று பிரபாகரனையும், பிரமுகர்களையும் ஆசீர்வதித்து வழியனுப்பிவைத்தது.

—6 ஆம் பக்கம் பார்க்க

## பிரபாவின் 'லக்கி நம்பர்' 5

விடுதலைப் புலிகளின் தலைவர் திரு வே. பிரபாகரனை டில்லிக்கு நேற்று அழைத்துச் சென்ற இந்திய விமானப்படையின் ஹெலிகப்டரின் இலக்கத்தின் கூட்டுத்தொகை ஐந்து ஆகும். (இதன் இலக்கம் 2903) இந்த இலக்கமே பிரபாகரனின் அதிர்ஷ்ட இலக்கமாகும். புலிகளின் முதலாவது ராணுவத் தாக்குதல் ஜூலை 23-ல் (கூட்டுத்தொகை ஐந்து) திருநெல்வேலியில் இடம்பெற்றது இதில் 13 ராணுவம் பலியானது புலிகள் கடைசியாக மேற்

—6 ஆம் பக்கம் பார்க்க

## புதன்கிழமை ஒப்பந்தம்?

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுவதற்காக இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி வெகு விரைவில் இலங்கை வரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது எதிர்வரும் புதன்கிழமை இவ் ஒப்பந்தம் கொழும்பில் கைச்சாத்திடப்படலாம் என ஏ. எப் பி செய்தி ஸ்தாபனம் நேற்றிரவு அறிவித்தது.

பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான இரண்டு ஒப்பந்தங்கள் கொழும்பில் கைச்

—6 ஆம் பக்கம் பார்க்க

# துறைமுகத்துக்குள் செல்ல கப்பல் ஏஜன்ஸிக்கும் தடை!

கப்பல் ஏஜென்சி நிறுவனமான ஜெயபாலசிங்கம் கம்பனியார் காங்கேசன்துறை துறைமுகத்திற்குள் நுழைவதற்கு இராணுவத்தினர் தடை விதித்துள்ளனர்.

இந்திய உணவுப் பொருட்களை காங்கேசன்துறை துறைமுகத்திற்கு ஏற்றிவரும் சகல கப்பல்களின் நலன்களையும் கவனிக்க இந்திய உயர்ஸ்தானிகராலயத்தினால் ஜெயபாலசிங்கம் கப்பல் நிறுவனத்தினர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தியஉயர்ஸ்தானிகராலயத்தின் உயர் அதிகாரிகள் திரு எச். எஸ். பூரி, கப்டன் குப்தா ஆகியோர் இந்த நிறுவனத்தின் பிரதிநிதி ஒருவருடன் இராணுவ அட்டூழியங்களினால் ஏற்படுத்தப்பட்ட நஷ்டங்களை பார்வையிட்டது, அகதிகள் முகாம்களுக்கு விஜயம் செய்ததும் இந்திய உதவி உணவுக்கப்பல் துறைமுகத்தில் நின்ற நேரத்தில் வெளியூர் பத்திரிகையாளர்கள் துறைமுகத்திற்கு விஜயம் செய்த பொழுது விடுதலைப்புலிகளினால் திரு எச் எஸ் பூரி கப்டன் குப்தா ஆகியோருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பின் போது எழுப்பப்பட்ட கோஷங்கள் சுலோகங்கள் பற்றி பத்திரிகையாளர்களுக்கு கூறியதுமே இந்த தடைக்குக் காரணமென கூறப்படுகின்றது.

### சிறிமாவோ அறிவிப்பு:

# புதிய இணைப்பு சுயாட்சியை சுதந்திரக்கட்சி எதிர்க்கும்

(கொழும்பு)

இனப்பிரச்சினையை தீர்ப்பது தொடர்பாக அரசாங்கம் இறுதியாக முன்வைத்துள்ள யோசனையை சுதந்திரக்கட்சி எதிர்க்கும் என்று திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

இந்தயோசனை இனப்பிரச்சினையை தீர்க்கப்போவதில்லை. மேலும் சூழ்நிலையை பாரதூரமாக்கவே செய்யும் இது தொடர்பாக கட்சியின் அரசியல் குழு விரைவில் கூடி ஆராயவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளையில் ஊவாபாணகமவில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய அமைச்சர் அத்துலத்முதலி. "யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல வவுனியா, திருமலை, மட்டக்களப்பு, கிழக்கு மாகாணத்தின் இதர பகுதிகளில் கூட இப்போது சிங்கக் கொடிகள் பறக்கின்றன வடக்கிலும் கிழக்கிலும் தேசியக் கொடியை எங்களால் உயர்த்தமுடியாது என்று கூறும் சுதந்திரக்கட்சியினர் நேரில் சென்று இதைப்பார்க்க முடியாதுள்ளனர்" என்று சொன்னார்.

### கமிஷனர் அலஸின் கருத்து

# இது ஒன்று மட்டுமே போதும் வேறு எதுவும் தேவையில்லை

"ஒரு குண்டுத் தாக்குதலினால் ஏற்படும் முழுப்பாதிப்புக்களும் இந்த அறையில் காணப்படுவதால், இதைவிடச் சிறந்த தடயங்களைத் தேடும் சிரமமான பணி இந்த விசாரணைக் கமிஷனுக்கு ஏற்படாது"

இவ்வாறு ஒன்பது அப்பாவிகளை துடிதுடித்துச் சாகவைத்த யாழ். வைத்தியசாலையின் 19 ஆம் வார்ட் மீதான கோட்டை இராணுவத்தினரின் ஷெல் தாக்குதல் ஏற்படுத்திய சேதங்களைப் பார்வையிட்ட பின்னர் முன்னாள் நீதியரசரும், அலஸ்கமிஷன் தலைவருமான திரு அலஸ் குறிப்பிட்டார்.

இக்கட்டடத்தில் யாழ் வைத்தியசாலை மீது கோட்டை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்களின் போது சேகரிக்கப்பட்ட ஷெல் சிதறு துண்டுகளையும் ஷெல் அடிப்பாகங்களையும் வைத்தியசாலைப் பணிப்பாளர் திரு சீ.எஸ் நச்சினார்க்கினியன் திரு. அலஸுக்குக் காட்டினார். ஒரு சில ஷெல் பாகங்களை அலஸ் தம்முடன் கொண்டு சென்றார்.

# இறந்தவர் குடும்பத்துக்கு உடனடியாக 1000 ரூபா

அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் வன்செயல்களினால் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு உடனடி உதவித் தொகையாக ஆயிரம் ரூபாவினை தற்போது வழங்கி வருகின்றது.

எவராக இருந்தாலும் வன்செயலினால் இறந்திருந்தால் அவரது குடும்பத்திற்கு இந்த நிதி வழங்கப்படும் எனினும் ஒரே சம்பவத்தில் ஒரு குடும்பத்தில் எத்தனை பேர் இறந்திருந்தாலும் அவர்களுக்கு ஆயிரம் ரூபா மட்டுமே உடனடி உதவித் தொகையாக வழங்கப்படும் இது தவிர வன்செயல்களினால் படுகாயமடைவோருக்கும் நிவாரண உதவிகள் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினால் வழங்கப்படுகின்றன. இந்த நிதித்தொகை காயத்தின் தன்மையைப் பொறுத்து தீர்மானிக்கப்படும்.

பிரதான உழைப்பாளிகளை வன்செயல்களில் இழந்த குடும்பத்தினருக்கு உடனடி உதவித் தொகையுடன் மேலும் பல சுய உதவி வேலை வாய்ப்புக்களும் வெளிநாட்டு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் செய்து கொடுக்கப்படுகின்றன.

## புலிகளின் எச்சரிக்கை

கிழக்கு மாகாண பிரதேச சபைகளுக்குப் போட்டியின்றித்தெரிவான அனைவரும் இம்மாத இறுதிக்குள் ராஜினாமாச் செய்யவேண்டுமென புலிகள் எச்சரிக்கை விடுத்துள்ளதாக பி பி சி தெரிவித்தது.

இவ்வாறு தெரிவான 150 பேரில் ஒருவர் ஏற்கனவே ராஜினாமா செய்துவிட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.


## நன்றி நவிலல்

கடந்த 20.07.87 திங்கட்கிழமை முல்லைத்தீவு பஸ்ஸில் சுமார் 6000/- பெறுமதியான பிடவை வகைகள் திருட்டுபோயுள்ளன. அப்பொருட்களை மீட்டுத் தந்த தமிழீழ விடுதலைப் புலிகள் ஸ்தாபனத்தினருக்கும், மற்றும் வர்த்தகர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆ. கதிரவேலு
காரைநகர்

07093


## ஆடி அமாவாசை விரதகாரர்கள் கவனத்திற்கு

இவ்வாண்டு ஆடி அமாவாசைத் தீர்த்த உற்சவம் சனிக்கிழமை காலை ஏழு மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது. அடியார்கள் தீர்த்தமாடி தங்கள் பிதிர்க்கடன்களைச் செய்வதற்கு வேண்டிய ஒழுங்குகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளன. கீரிமலைக்குச் சென்று சமுத்திர தீர்த்தமாடி பிதிர்க்கடன் செய்யமுடியாத நிலையுள்ளதாலேயே இவ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

## வின்சன்ற்மீண்டும் அமைச்சரானார்

கொழும்பு வடக்கு தொகுதி எம் பி திரு வின்சற் பெரேரா வியாழன்று மீண்டும் பாராளுமன்ற விவகார விளையாட்டுத்துறை அமைச்சராக ஜனாதிபதி ஜெயவர்த்தனா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்தார்.

## நடனவகுப்பு இடமாற்றம்

யாழ் மாவட்ட கலாசாரப் பேரவையினால் நடாத்தப்படும் பரத நடனப் பயிற்சி வகுப்புகள் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறுவது வழக்கம் இக்கல்லூரி மண்டபத்தில் இன்று 25 07 87 தொடக்கம் க.பொ.த (உயர்தர) பரீட்சை நடைபெற இருப்பதால் பயிற்சி வகுப்புகள் தற்காலிகமாக யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆரம்ப பாடசாலையில் நடைபெற இருக்கின்றன.

## பல்கலைக்கழக மாணவருக்கு நிதியுதவி

தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் வடமராட்சிப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த பல்கலைக்கழகமாணவர்களுக்கு நிதி உதவியினை வழங்கி வருகின்றது இந்த உதவி பல்கலைக்கழக புனர்வாழ்வு அமையத்தின் ஊடாக மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. இதேவேளை பல்கலைக்கழக புனர்வாழ்வு அமையத்தின் வடமராட்சிப்பகுதி மக்களுக்கு உதவும் பொருட் சேகரிப்புத் திட்டத்திற்கு தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் பன்னிரெண்டாயிரம் சவர்க்காரக் கட்டிகளை வழங்கியுள்ளது.

## அரசாங்க அறிவிப்பு

திருமலையிலுள்ள சாம்பல் தீவில் இருவர் தீவிரவாதிகளால் சுட்டுக்கொல்லப்பட்டதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.


# சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சகலவிதமான பிறந்த தின, திருமண மற்றும் வைபவங்களுக்கான வாழ்த்து மடல்கள் புதிதாக வந்துள்ளன. வியாபாரிகளுக்கு கழிவு வழங்கப்படும் கடிதமூலம்தொடர்பு கொள்ளும் வியாபாரிகளுக்கு நேரடியாக விநியோகம் செய்யப்படும். பூபாலசிங்கம் புத்தகசாலை,15/2 மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 07072

### விற்பனைக்கு

கேக் பேணருடன் கூடிய நாஷனல் காஸ் குக்கர் காஸ் சிலிண்டருடன் விற்பனைக்குண்டு தொடர்பு-60/5, இந்துக்கல்லூரி ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 07094

நல்ல நிலையிலுள்ள 25 சிறி 8000 தொடரிலக்கமுடைய 135 மசி பேர்குசன் உழவு இயந்திரம் மலிவு விலையில் உடன் விற்பனைக்குண்டு. அனிற்ரூ ஸ்ரோர்ஸ் & கூல்பார் கோப்பாய்ச்சந்தி. 07085

### சேவை

முதலாம் குறுக்குத்தெருவில் இயங்கி வந்த யாழ் சைனீஸ் றெஸ்ரூரன்ற் தற்போது 168, கோயில் வீதியில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இது கைலாசபிள்ளையார் கோவில் சந்தியில் இருந்து கோவில் வீதித் தெற்குப் பக்கமாக நூறு யார் தொலைவில் உள்ளது 07090

### கல்வி

G C.E (O/L)ல் கட்டாய பாடமாகிய கணிதத்தினை புதிய கல்வித்திட்டத்திற்கமைய 18 வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து விசேட சித்திக்கு குறைந்த காலத்தில் வீடுகளிற் சென்று கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன் 10 கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி 07092


### 'யாழ்ப்பாண அவலக்கோலங்கள்'

# வீடியோ வெளியீட்டு விழா

யாழ் வர்த்தக சங்கத்தினரால் தயாரிக்கப்பட்ட 'யாழ்ப்பாண அவலக் கோலங்கள்' என்னும் வீடியோ விவரணப்பட வெளியீட்டுவிழா 26ஆம் திகதி ஞாயிறு காலை 9 30மணியளவில நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

வர்த்தகசங்கத்தலைவர் திரு. ஆ.க நடராசா தலைமையில் நடைபெறும் இவ்விழாவை மாநகர ஆணையாளர் திரு. சி. வீ கே.சிவஞானம் ஆரம்பித்து வைப்பார். கவிஞர் இ.முருகையன், கலாநிதி சோ கிருஷ்ணராசா, கல்வயல் வே. குமாரசாமி, சக்தி ஜெகநாதன், திரு. சி. நமசிவாயம் ஆகியோர் உரையாற்றுவார்கள்.

### வல்லிபுரகோவில் பகுதியில்

# காலையில் அகப்படுபவர்கள் மாலைவரை காவல் கடமை

(சாவகச்சேரி)

வல்லிபுரக் கோவிலுக்கு அருகாமையில தினமும் இராணுவத்தினர் காலை ஆறு மணி முதல் மாலை ஏழு மணிவரையும் நிலை கொண்டுள்ளதுடன் அப்பகுதியால் செல்பவர்கள் சிலரை தமக்கு பாதுகாப்பாக வைத்திருந்துவிட்டு மாலையில் விடுகின்றனராம்.

பருத்தித்துறையில் இருந்து வெற்றிலைக்கேணி, நாகர் கோயில் பகுதிகளுக்கு இப்பகுதியால் செல்பவர்களே இவ்வாறு தடுத்து வைக்கப்படுகின்றனராம்.

நேற்று முன்தினம் இங்கு சிலரை இவ்வாறு தடுத்து வைத்த ராணுவத்தினர் இப்பகுதியால் வரக் கூடாது எனவும் எச்சரித்தனராம்.

வல்லிபுரக் குறிச்சி மணற்பிட்டிகள், பற்றைகளிலும் இவர்கள் மறைந்து காணப்படுவதால் இவ்வழியினூடாக செல்ல மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

### ஜி. சி. ஈ. (உ. த) பரீட்சை

# விடைத்தாள் மதிப்பீடுகள் ஆகஸ்ட் 11முதல் 22வரையும்

(அச்சுவேலி)

இன்று ஆரம்பமாகியுள்ள க. பொ. த உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள்களை மதிப்பிடும் முதலாம் கட்ட வேலைகள் ஆகஸ்ட் மாதம் 11 ஆம் திகதியில் இருந்து ஆகஸ்ட் 22 ஆம்திகதி வரை நடைபெறவுள்ளது இன்று தொடக்கம் 4 8 87 வரை நடைபெறவுள்ள பாடங்களே இந்நாட்களில மதிப்பிடப் படவுள்ளன.

பௌதிகவியல், கணக்கியல் விவசாய விஞ்ஞானம், உயிரியல், வரலாறு, பரதநாட்டியம், தூயகணிதம் மனைப்பொருளியல், தாவரவியல், தமிழ். பிரயோககணிதம், பொருளியல் பாடங்களே முதலாம் கட்டமாக மதிப்பிடப்படவுள்ளதாகபரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

## கிராமசேவையாளர்

(எழுதுமட்டுவாழ்)

பளை உதவிஅரசாங்கஅதிபர் பிரிவில் புதிதாக உருவாக்கப்பட்ட பளை கிராமசேவை பிரிவுக்கு திரு க பத்மநாதனும், தர்மக்கேணி பிரிவுக்கு திரு ஐ சிவராசாவும், தம்பகாமம் பிரிவுக்கு திரு வே. கண்ணப்பமூர்த்தியும் புதிய கிராமசேவை அலுவலர்களாக கடந்த முதலாம் திகதி தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## ஆலய உற்சவம்

(காவலூர்)

புங்குடுதீவு பெருங்காடு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இம் மாதம் 31ந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகின்றது.

8 ஆந்திகதி தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

நல்வாக்கு

பேச்சின் நீளம் அதன் மதிப்பை குறைத்துவிடுகிறது. நாவை அடக்காதவன் துக்கப்படுவான்.

—முகம்மதுநபி

ஆர்.ஜி. பில்டிங், ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 25007, 25008

# இதயநாதம்

## பிரச்சினைத் தீர்வின் இறுதிக் கட்டம்

1983 ஆடிக்கலவரம் ஆரம்பமாகி நேற்றுடன் சரியாக நான்காண்டுகளாகிவிட்டன. இந்த வேளையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கலாம் போன்றதொரு நம்பிக்கை ஒளி சற்றே தோன்றியுள்ளதாகத் தெரிகின்றது.

1983 ஜூலை மாதம் 24ஆம் திகதி திட்டமிட்டு ஆரம்பிக்கப்பட்ட தமிழர் படுகொலை, சொத்துக்கள் எரிப்பு, வீடுகள் உடைப்பு ஆகியன மிகவும் கச்சிதமான முறையில் கடந்த நான்காண்டுகளாக தொடர்ச்சியாக, அரசாங்க ஆதரவுடன் செய்யப்பட்டு வருகின்றது.

அமைச்சர் அத்துலத்முதலி நேற்று முன்தினம் எங்கோ பேசுகையில், கடந்த நான்காண்டுகளாக இனக்கலவரத்தினால் ஐயாயிரத்துச் சொச்சப் பேர் மரணமாக நேர்ந்ததாகத் தெரிவித்துள்ளார்.

ஆனால் வடக்குக்கிழக்கு மாகாணங்களிலுள்ள பொது நிறுவனங்கள் மற்றும் தொண்டர் ஸ்தாபனங்களின் புள்ளி விபரங்களின்படி ஏறத்தாழ பதினையாயிரம் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

மரணங்களைக் கூட குறைத்துக் கணக்குக்காட்டி நல்ல பிள்ளையாகத் தன்னை மக்கள் முன்காட்ட லலித் ஆசைப்படுகின்றார்.

பேராசிரியர் சிவத்தம்பியைத் தலைவராகக் கொண்ட அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் சேகரித்த புள்ளி விபரங்களின்படி வடக்குக் கிழக்கில் அகதிகளாக்கப்பட்ட தமிழர்களின் தொகை மூன்று லட்சத்து ஐம்பதாயிரத்தை எட்டிப்பிடித்துள்ளது.

உள்நாட்டில் அகதிகளாக வசிப்பவர்களின் தொகையே இது.

இந்தியாவிலும், மேற்குநாடுகளிலும், அகதிகளாகவும்' அரசியல் தஞ்சம் கோருவோராகவும் அடைக்கலம் புகுந்துள்ளவர்களின் எண்ணிக்கையையும் இதனுடன் சேர்த்தால் தமிழரின் மொத்தச்சனத்தொகையில் ஏறத்தாழ அரைவாசிப் பேர் அகதிகளாகவே வாழ்ந்து வருவது தெரியவரும்.

இவ்வாறான இன அழிப்பு வேலையின் பெரும் பகுதியை முடித்து, தமிழீழப் பகுதிகளில் ஏறத்தாழ முப்பதாயிரம் படையினரையும், இருநூறு வரையான ராணுவ முகாம்களையும் வைத்துக்கொண்டு, பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண இலங்கை ஒப்புக்கொண்டுள்ளது.

வடக்கும் கிழக்கும் இணைந்த சுயாட்சியை வழங்க இந்த நேரத்திலாவது ஜனாதிபதி ஜெயவர்த்தனா ஒப்புக் கொண்டமையை நாம் மனமாரப் பாராட்டும் அதே வேளையில் இது எந்தளவுக்கு ஆத்ம சுத்தியானது என்ற ஐயப்பாடும் ஏற்படுகின்றது.

கடந்த காலத்தின் கசப்பான அனுபவங்கள் ஜெயவர்த்தனாவை நம்புவதற்கு இடமளிக்கவில்லை என்பதை பகிரங்கமாகவே நாம் குறிப்பிட விரும்புகின்றோம்.

இதுவரை காலமும் தமிழ் மக்களும், அவர்களின் பிரதிநிதிகளும், அவர்களது தலைவர்களும் ஏமாற்றப்பட்டது போல, பிரதமர் ராஜீவ் காந்தியை தொடர்ந்து ஏமாற்றுவது சுலபமல்ல.

இப்படியான நிலைவரத்தில் முற்றிலும் எதிர்பாராத விதமான திடீர் திருப்பமொன்று நேற்றுக்காலை ஏற்பட்டது.

புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் கடந்த ஒரு வாரமாக தொடர்ச்சியாகப் பேச்சு நடத்திவந்த இந்திய தூதரக செயலர் திரு. பூரியும், கப்டன் குப்தாவும் நேரில்வந்து, கௌரவ மரியாதையுடன் பிரபாகரனை டில்லிக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

இந்திய விமானப்படையின் ஹெலிகப்டர் சுதுமலையில் வந்திறங்கி பிரபாகரனையும், அவரது அரசியல் ஆலோசகர்களையும் டில்லிக்கு அழைத்துச் சென்றுள்ளது.

பிரச்சினையைத் தீர்ப்பதற்கான இறுதிக்கட்ட நடவடிக்கையாக இதனை நாம் கொள்ளலாமா?

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி மண்டபத்தில் ஜூலை 19 இல் நடைபெற்ற "டிசம்பர் 19 யோசனை" கருத்தரங்கில் விரிவுரையாளர் திரு. திருநாவுக்கரசு தெரிவித்த கருத்துக்கள் இங்கு தொகுத்துத் தரப்படுகின்றன.

# தமிழர்களின் உரிமைகளை பிறரிடம் அடகு வைப்பதாக தீர்வுகள் அமையக் கூடாது!

1919 ஆம் ஆண்டு முதல் இன்று வரை இலங்கையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் யாவும் தமிழ் பேசும் மக்களின் தேசிய இன அபிலாஷைகளை ஒடுக்குவதற்காக எதிரிகளால் கையாளப்பட்ட வடிவங்களே.

சேர். பொன் அருணாசலம், திரு ஜேம்ஸ் கிரிஸ்ரீபன ஆகியோரு கிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையானது நிறைவேறாது போனது.

1925 ஆம் ஆண்டு திரு. சூரியாவுக்கும், திரு வைத்திலிங்கம் துரைசாமிக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் பின்னர் கைவிடப்பட்டன. அரசியல் ரீதியான சில பின்னணிகளை சாதிப்பதற்கே அந்த பேச்சுவார்த்தைகள் பயன்படுத்தப்பட்டன.

போராட்டங்களின் பரிமாணங்கள் வளர்ந்து கொண்டு போகின்றபோது, அவற்றை ஒடுக்க ஆயுத வழிமுறைகள் இயலாது போகும் போது, அந்தப் போராட்டத்தை ஒடுக்கவும், அந்த சமூகத்தில் உள்ள மேல்தர வர்க்கமொன்றுடன் பேச்சுவார்த்தைகளை வைத்துக் கொண்டு போராட்டத்தை நசுக்கவும் பேச்சுவார்த்தைகளை கையாள்வது என்பது வரலாற்று உண்மை.

ஆங்கிலேயரின் இந்த இரக்கம் காட்டி கொலைசெய்வது (Kill By Kind) என்பதையிட்டு நாம் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

எதற்காக, எந்தெந்தக் கட்டங்களில் பேச்சுவார்த்தை தேவை என்பதையிட்டு நாம் ஆராய வேண்டும். போராட்டம் உருண்டு வருகின்றபோது சில விட்டுக் கொடுப்புக்கள் மூலம் போராட்டத்தை கைவிடப் பண்ணுவதும், நீண்டகால நோக்கில அவற்றை மழுங்கடிக்கப் பண்ணுவதும் வழக்கம்.

1962 ஆம் ஆண்டு பிரித்தானியாவைச் சேர்ந்த அன்சன் பிரபு கூறிய கருத்தொன்றை இது தொடர்பாக நாம் அவதானிக்க வேண்டும்.

"ஒரு போராட்டத்தின் ஆத்மாவை அழித்து விட்டால் போராட்டமே அழிந்துவிடும். போராட்டத்தின் ஆத்மா எதில் உருண்டு வருகின்றதோ அதை விலை கொடுத்து வாங்கி அழித்து விடு" என்றார் அன்சன் பிரபு.

நாம் நம் எதிரி எவ்வகையில் சிந்திக்கின்றான் அல்லது எவ்வகையில் சூழ்ச்சி செய்கின்றான் அல்லது எவ்வழிகளை கையாள்கிறான் அல்லது எவ்வழிகளில் எம்மை தோற்கடிக்க முயல்கிறான் என்பதையிட்டு போதியளவு கவனம் செலுத்தவில்லை என்பதை நான் வேதனையுடன் கூறிக் கொள்கிறேன்.

பேச்சுவார்த்தையின் இந்த வகையான பாரம்பரியத்தால் மரபுகளால் தான் நாம் கடந்த காலத்தில் பேச்சுவார்த்தைகள் மூலம் தோற்கடிக்கப்பட்டுள்ளோம்.

மேற்கு ஐரோப்பிய நாடுகளைப் பொறுத்தவரை தேசிய இனப்பிரச்சினை முதலாம் உலக மகாயுத்தம் வரை எடுபடவில்லை. முதலாம் உலக மகாயுத்தம் வரை தேசங்களின் சுயநிர்ணய உரிமைப் பிரச்சினையே முன் நின்றது.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில்தான் தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமை என்ற பிரச்சினை இடம்பெற்றது. சோவியத்யூனியன், செக்கோஸ்லவாக்கியா, யூகோசிலவாக்கியா என்பனவே அதில் அடங்கும் நாடுகள்.

1919 ஆம் ஆண்டில் தேசிய இனப்பிரச்சினை சர்வதேச சங்கத்தில் முன்வைக்கப்பட்டபோது பினவரும் விடயங்களும் முன்வைக்கப்பட்டன. ரஷ்யாவின் அப்போதைய புரட்சி இயக்கம் தேசிய இனத்துக்கு சுயநிர்ணய உரிமையுண்டு என்று கூறி தேசிய இனம்பற்றிய வரையறை ஒன்றை அங்கே முன்வைத்தது.

தேசிய இனம் ஒன்று ஒரு அரசிலிருந்து பிரிந்து செல்லலாம்; அந்த அரசுடன் இணைந்து இருக்கலாமா, இல்லையா என்பது பற்றி அந்த இனம் தீர்மானிக்கலாம்; அல்லது ஓர் அரசிடம் இருந்து பிரிந்து இன்னோர் அரசுடன் சேரலாம். இது மூன்றும் தேசிய சுயநிர்ணய உரிமையாகும். ஒரு சர்வஜன வாக்கெடுப்பு மூலமாகவே இவை நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் அங்கே சொல்லப்பட்டது. இந்த முடிவின்கீழ் உலகில் முதன்முதல் 3 இனங்கள் பிரிந்து சென்றன. 1917 சோவியத புரட்சியின்போது அங்கே 3 இனங்கள் பிரிந்து சென்றன. அதன்பின் சுய நிர்ணய உரிமையின்கீழ் எதுவும் இன்றுவரை உலகில் பிரியவில்லை.

இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டபோது பிரித்தானிய தீவிரவாதி ஒருவர் "கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு பிரிந்து செல்லும் சுயநிர்ணய உரிமை அவசியம் தேவை. ஆனால் பிரித்தானிய, கனடா இனங்களுக்குத்தேவையில்லை" என்றார்.

ஐரிஸ் இனம் பிரித்தானியாவில இருந்து பிரியக் கூடாது. சோவியத்நாடு பல இனங்களாக பல துண்டுகளாக பிரிவுபட வேண்டும் எனும் நோக்கங்களுடனேயே இப்படி கோர்லி பிரபு கூறினார்.

ஆனால் 23 வருடங்களுக்குள் வரலாறு அவருக்கு காட்டிவிட்டது.

1922 ஆம் ஆண்டு பைனமேசியா பிரிந்து சென்று சோவியத் யூனியனுடன் ஓர் அங்கமாக சேர்ந்தது ஊறென் பிரிந்து சென்று சோவியத்துடன் ஓர் அங்கமாக சேர்ந்தது

அப்போதுதான் சுயநிர்ணய உரிமை என்பது பலவீனப்படுத்தும் உரிமையல்ல; பலப்படுத்தும் உரிமை என்று உலக வரலாற்றில் தெரியவந்தது. அதன் பின் மேற்கத்திய தேசங்கள் இதைப்பற்றி அதிகம் பேசுவதில்லை.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்தான் எமது நாடுகளுக்கு சுயநிர்ணய உரிமை என்ற பிரச்சினை உள்வந்தது.

திராவிட நாடு என்ற பிரச்சினையும் இக்காலகட்டத்திலேயே எழுந்தது. அப்போதே இந்தியாவிலிருந்து, பாகிஸ்தான், பங்களாதேசம் பிரிவதற்கான போக்குகள் எழுந்தன. ஆனால் எந்த ஒரு நாடும் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் சுயநிர்ணய உரிமையுடன் பிரிந்து செல்வதை கையாளவில்லை.

தமிழர்களது பிரச்சினையையும் நாம் இந்தவகையில் மிக உன்னிப்பாக உற்று நோக்க வேண்டும். ஆசிய ஆபிரிக்க நாடுகளில் ஏகாதிபத்தியம் கைக்கொள்ளுகின்ற ஒரு வழிமுறை என்னவென்றால்; அரசுகள் ஒருகுழப்பநிலையில் இருக்க வேண்டுமென்றால் சுயநிர்ணய உரிமையின் அடிப்படைப் பிரச்சினைகள் முற்றுமுழுதாக தீர்க்கப்படாமல் அரைகுறை தீர்வில் இருந்தால்தான் அவை ஒரு பலமற்ற அரசுகளாக குழப்பநிலையில் இருக்கும் என்பதாகும். அப்படி பலமற்ற அரசு இருந்தால்தான் மேலைத்தேச நாடுகளின் சந்தைவாய்ப்புகளையும், இராணுவ தளபாட விற்பனைகளையும் இந்நாட்டில் ஸ்திரப்படுத்தலாம் என்பதாகும். இதன் மூலம் தம்மைப் பெரும் வல்லரசுகளாக மாற்றலாம்.

இததகைய அடிப்படையில்தான் ஆசிய ஆபிரிக்க நாடுகளின் தேசிய இனப்பிரச்சினை தீர்த்துவைக்கப்படாமல் இருக்கின்றது. அப்படியான பல்வேறுபட்ட பிரச்சினைகளில் ஒன்றுதான் இலங்கையின் தமிழ்மக்களின் பிரச்சினையும்.

இந் நிலையில் இந்தியாகூட தனது ஆட்சியை ஒற்றை ஆட்சி முறையில் அரை சமஷ்டி அரசு முறையில் வைத்துள்ளது. அந்த அரை சமஷ்டி ஆட்சியில் கூட தேசிய இனங்கள் தமது உரிமையை அனுபவிக்கவில்லை. அங்குகூட பிரச்சினைகள் உண்டு.

1960 ஆம் ஆண்டு நேரு சீக்கியரோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தில் சண்டிகார் பஞ்சாப்புக்கு உரியது என்று கூறியிருந்தார். இதையே ராஜீவ் காந்தியும் இருவருடங்களிற்கு முன் கூறியிருந்தாலும், இன்னும் அது அமுல் படுத்தப்படவில்லை.

இந் நிலையில்தான் இலங்கையில் சுயநிர்ணய உரிமை உள்ள தமிழ் இனம், முன் உதாரணமுள்ள ஒரு இனமாக ஆசிய ஆபிரிக்க நாடுகளில் உருண்டோடக்கூடிய ஒரு புவியியல் காரணியாக விளங்குகிறது.

இந்த மக்களை உண்மையாகவே இப் போராட்டத்தில் சரியான வழியில் வழி நடத்தினால் சுயநிர்ணய உரிமை என்கின்ற உண்மைக் கோட்பாட்டை இத்தமக்கள் அடைய முடியும். ஆனால் அதை அடைய முடியாததற்கு போராட்டத்தில் ஒன்றுபடாமையும், நிர்மாணிப்பதிலுள்ள தவறுகளுமே காரணமாகும்.

ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் காணப்படுகின்ற ஒரு பொதுவான முதலாளித்துவ பொருளாதார கொள்கையமைப்பும், சந்தையமைப்பையும் அடிப்படையாகக்கொண்டே இனபபிரச்சினை அமைந்துள்ளது அதனைப் பாதிக்கவிட இந்தியா விரும்பாது. இந்தநிலையில் தான் இந்தியாவின் நிலை நீடிக்கும். ஆனால் எவரினதும் திணிப்புக்கும் இடம்கொடாது இவற்றோடு ஒத்துப்போகிற வகையில் இனப்பிரச்சினை முன் எடுத்துச் செல்லப்பட வேண்டும். எமது தேசிய தனித்துவத்தை அழியவிடாது எமது சுயநிர்ணய உரிமையை பாதுகாப்போம்என்றால்எதிர்காலத்

—5ஆம் பக்கம் பார்க்க

# HORIZON ENTERPRISES

குவைத், மாலைதீவு, பாஹ்ரெயின், சவூதி அரேபியா முதலான மத்திய கிழக்கு நாடுகளுக்கான அனைத்து வேலை வாய்ப்புகளிற்கு பிரயாணம் செய்ய விரும்பு வோர் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

அவ்வப்பகுதி மக்களின் வசதிகளை முன்னிட்டு 2 கிளைக் காரியாலயங்கள், எம்மால் புதிதாக ஆரம்பிக்கப் பட்டுள்ளன என்பதையும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

முகவரிகள்:

**R. குணரத்தினராசா**
கண்டி வீதி, கொடிகாமம்,
(கொடிகாமம் புகையிரத நிலையம் முன்பாக)

**இலியாஸ் ஏபிராம் A. P.**
இரண்டாம் வட்டாரம்,
அல்லைப்பிட்டி

ஏற்கனவே எம்மிடம் பாஸ்போட் தந்தவர்களின் பிரயாணத்திற்கான அனைத்து ஒழுங்குகளும் தயார் செய்யப்பட்டுள்ளது. இவர்களின் பெயர் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. 1ம் திகதி சனிக்கிழமை பிரயாணம் அதற்கு முன்னர் உடனடியாக எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

1. முருகுப்பிள்ளை லெட்சுமணன் - கலைநகர், சித்தன்கேணி.
2. சின்னையா பொன்ராசா - சங்கானை கிழக்கு, காபன்டை கட்டுவல் வீதி, சங்கானை.
3. செல்லத்துரை சிவரத்தினராசா - குறிஞ்சா தீவு, ஆனையிறவு
4. மாணிக்கம் கிருஷ்ணன் - உரும்பராய் கிழக்கு, யோகபுரம்.
5. செல்லப்பா சுதாகரன் - சமாதி கோவிலடி, குப்பிளான், ஏழாலை
6. துரைராசா சக்திதாசன் - அரசடி ஒழுங்கை, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.
7. வேலுப்பிள்ளை அமரசிங்கம் - சண்டிலிப்பாய் சந்தி. சண்டிலிப்பாய்.
8. நடராசா இராமச்சந்திரன் - ஆவரங்கால், புத்தூர்.
9. செல்லப்பா சுப்பையா கணேசநாதன் - நாவற்குழி, கைதடி.
10. தருமராசா ஸ்ரீஸ்கந்தராசா - 723, மானிப்பாய்ரோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.
11. முருகேசு சுப்பிரமணியம் ஸ்ரீகாந்தன் - B. H. Lane, இருபாலை, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
12. தம்பிராசா செல்வச்சந்திரன் - பாரதிலேன், நாயன்மார்க்கட்டு, யாழ்ப்பாணம்.
13. ஆழ்வாப்பிள்ளை பரமநாதன் - பார்வதி பவனம், அல்வாய் தெற்கு, அல்வாய்.
14 ஜேம்ஸ் ஜெடசீலன் ரஞ்சன் சவரிமுத்து.
15. கந்தசாமி மதனகோபாலன் - டச்ரோட், வட்டு கிழக்கு, வட்டுக் கோட்டை.
16. சோமசுந்தர சர்மா ரவிச்சந்திரன் - சித்திவிநாயகர் கோவிலடி, அரியாலை.
17. சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை ரெபேட் எட்பனட் - தவசிகுளம் மிருசுவில்.
18. சுப்பிரமணியம் ஞானகணேசு - வேம்படிரோட், உடுத்துறை, தாளையடி.
19. வரப்பிரகாசம் செல்வராசா - சூழாவடி, செட்டிதோட்டம், 4-ம் கட்டை, ஆனைகோட்டை.
20. சிவக்கொழுந்து பரமேஸ்வரன்.
21. கிருஷ்ணபிள்ளை ரவீந்திரன் - கவுந்தில் கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.
22. செல்வராசா ஜெயசீலன் - மணல்குடியிருப்பு, முல்லைத்தீவு.
23 தியாகராசா சண்முகநாதன் - கல்வயல் வடக்கு, சாவகச்சேரி.
24. சூசைப்பிள்ளை யோசெப் ஜேசுதாசன் - லோட்ஸ் ரோட், சில்லாலை மேற்கு, பண்டத்தரிப்பு.
25. கதிரவேலு ஸ்ரீதரன்.
26. செபமாலை டேவிட் - 4வது மைல் ஆனைக்கோட்டை.
27. முகமட் யாகுல் அமீர்.
28. பொன்னையா குணரட்ணம்.
29. சின்னத்துரை புண்ணியமூர்த்தி - இல 35, 5ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை
30. மயில்வாகனம் ஜெயகாந்தன்.
31. நாகலிங்கம் ஜெயானந்தராசா - 24, கோவில் வீதி, சின்னல் போஸ்ட், சுண்டுக்குளி.
32. சுப்பிரமணியம் இராசையா இராசரட்ணம் C/o N. இராசலிங்கம் ஏழாலை மத்தி, ஏழாலை.
33. அந்தோனிப்பிள்ளை கொட்வின் விமலதாஸ்.
34. மாரிமுத்து நாகேஸ்வரன் - வேலணை கிழக்கு, வேலணை.
35 பொன்னையா புண்ணியமூர்த்தி - நீர்வேலி வடக்கு, நீர்வேலி
36. சவரிராஜப்பு சரண்சிலஸ் - கிழக்கு தெரு, ஊர்காவற்றுறை.
37. F. டொமினிக் ஜீவநாதன் - மேலயப்புலம், அளவெட்டி தெற்கு, அளவெட்டி.
38. அலோசியஸ் எட்வேட் இன்பராஜா -
39. முருகுப்பிள்ளை ஜெகன்மோகன் - கலைநகர், சித்தன்கேணி.
40 S பற்றிக் ஜெயராஜா - கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறை.
41. கைலாசபிள்ளை லாலாகரன்.
42. சடையர் வேலாயுதபிள்ளை - வரணி, இயற்றாலை.
43. ஆழ்வார் கந்தசாமி - வரணி, இயற்றாலை.
44 வேலன் தங்கராசா - வரணி, இயற்றாலை.
45 பிலிப் யேசுதாசன் - பலாலி சந்தி, வசாவிளான்.
46. பஸ்ரியன் மலகியஸ் வின்சன்ரக்கி - இல 11, St. செபஸ்ரியன் ரோட், குருநகர், யாழ்ப்பாணம்
47. இராசையா தேவராசா - புதுமடம், உடுவில் தெற்கு. மானிப்பாய்
48. சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை பூபாலசிங்கம் - பலாலி ரோட், 1/20 2ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
49. காசிப்பிள்ளை அமிர்தலிங்கம், கச்சாய்தெற்கு, கொடிகாமம்.
50. செல்லத்துரை தெட்சணாமூர்த்தி ஜெயகுணநாதன் - அராலி கிழக்கு, அராலி
51. அந்தோனி பிரான்சிஸ் ஹென்றி - மாசியப்பிட்டி, சண்டிலிப்பாய்
52. கதிரன் மணியம் கேதீஸ்வரநாதன் - கல்லுடை, புத்தூர் கிழக்கு, புத்தூர்.
53. கந்தையா செல்லத்துரை ஜனதாசன் - கற்பக பிள்ளையார் கோவிலடி, உடுவில் கிழக்கு, சுன்னாகம்
54. கணபதி தம்பிராசா மகாலிங்கம் - ஐயனார் கோவிலடி கொக்குவில் மேற்கு. கொக்குவில்.
55. கதிரவேலு சிங்கராசா - சரவணை கிழக்கு, வேலணை.
56. வேலப்பொடி தம்பிராசா குலபதி - கோணப்புலம். மல்லாகம் யாழ்ப்பாணம்.
57. இராசு இராசநாயகம் புதுமடம், உடுவில் தெற்கு, மானிப்பாய், யாழ்ப்பாணம்.
58 வீரசிங்கம் நவரட்ணம் கணேசபதி - மானிப்பாய் ரோட், உரும்பராய் தெற்கு, உரும்பிராய்.
59. முத்தன் அரியராசா - உரும்பராய் மேற்கு, உரும்பராய்
90. சந்தையா ஐயாக்குட்டி கிருபாகரன் - இணுவில்தெற்கு, இணுவில்.
61. சண்முகநாதன் மனோரஞ்சன் - பாடசாலை ஒழுங்கை, தாவடி, கொக்குவில்.
62. கதிர்காமு விக்கினேஸ்வரன் - புதிய பூமி, இடைக்காடு, அச்சுவேலி.
63. செல்லத்தம்பி இராசையா பரமேஸ்வரன் - நந்தாவில் ஒழுங்கை, தாவடி, கொக்குவில்.
64. வீரகத்தி சுப்பையா பத்மநாதன் - குப்பிளான், ஏழாலை.
65. முத்தன் அரியராசு - உரும்பராய் மேற்கு, உரும்பராய்.
66. சுப்பையா சுந்தரலிங்கம் - சரசாலை வடக்கு, சாவகச்சேரி.
67. சண்முகம் ரவீந்திரராசா - செட்டியார் மடம், அராலி வடக்கு, வட்டுகோட்டை.
68 ஐயாத்துரை லிங்கேஸ்வரன் - சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.

பெயர் குறிப்பிடப்படாதவர்களும் உடன் எம்மைக் காரியாலயத்தில் சந்திக்கவும்.

★ மிகவும் அனுபவம் வாய்ந்த மெக்கானிக்மார் 10 பேர் உடன் தேவை

தலைமைக் காரியாலயம்:

## A. பத்மதாஸ்

97/1, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

கடிதமூலம் தொடர்பு கொள்ள விரும்புவோர், சுய விலாசமிடப்பட்ட முத்திரையொட்டிய கவருடன் தொடர்பு கொள்ளவும்.

நேரில் தொடர்பு கொள்வோர், தினமும் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரையுள்ள காரியாலய நேரத்தில் சந்திக்கவும்

# பொடிப்பொழுது

"WE WILL NOT ALLOW YOU TO WIN THE WAR") (போரில் நீங்கள் வெற்றி பெற நாங்கள் அனுமதிக்கப் போவதில்லை)

எங்கள் நாட்டின் அதி உத்தம தலைவர் ஒருவரைப் பார்த்து, அயல் நாட்டுத் தூதுவர் ஒருவர் இவ்வாறு கூறினாராம்.

சில தினங்களுக்கு முன்னர் இருவரும் தனிமையில் பேசியபோதே இவ்வாறு கூறப்பட்டதாம்!

அதன் பின்னரே கிழவனார், தமது தொனியை மாற்றி, சுருதியைக் குறைத்து, "எல்லாத்துக்கும் சரி" என்று கூறி, இப்போது படியிறங்கி வந்துள்ளாராம்.

எல்லாம் இந்த அரிசிக் கப்பல்களின் திருவிளையாடல்தான்!

**உக்கிரன்**

# இன்றைய பலன்

**மேடம்:** வீண்செலவு அவசர முடிவு, மனக் கவலை, அலைச்சல், பூமிப்பிணக்கு, வீண் பழி கேட்டல், வாகன நஷ்டம்.

**இடபம்:** செய் தொழிலால் அதிக லாபம், வாசன விருத்தி, நண்பர்கள் உதவி, தூரதேசம் போனவர் வருகை.

**மிதுனம்:** வாக்குக் கலகம், உதவியால் உபத்திரவம், வீண் பழி கேட்டல், மாதா வழியால் கவலை, பொருள் நஷ்டம்

**கடகம்:** வாக்கு வசீகரம், புகழ், மாங்கல்யச் சிறப்பு, விவாக ஒப்பந்தம், காரிய சித்தி, அதிகலாபம்.

**சிங்கம்:** திருடர் தொல்லை பணக் கஷ்டம், எதிரிகளால் பயம், எண்ணிய காரியம் தடை, அலைச்சல்.

**கன்னி:** பெரும் புகழ் நன்மையான செயல், நண்பர்கள் வருகை, விருந்துபசாரம், இல்லறச் சிறப்பு.

**துலாம்:** மாதாவழி உதவி வாகனக் கஷ்டம், சகல காரிய சித்தி, வருவாய் உயர்வு, பூமிப் பேறு

**விருச்சிகம்:** புத்திரரால் புகழ், இரு தொழில் வருமானம், நல்லோர் நட்பு, விடா முயற்சி, தொழிற் பலிதம்.

**தனுசு:** வீண்பழியும், பகையும் வரும், புதுத் தொழிலால் நன்மை இடமாற்றம், கவலை மிகும்.

**மகரம்:** வாகனதிகளால் யோகம், பிரயாணம் நன்மை பயக்கும், விவாகம் கை கூடும், அதிகாரப் பேறு.

**கும்பம்:** வீண்வாக்கு வாதம், குடும்பச் சண்டை, சரீர சுகக் கேடு, பெரியோர் உதவி, பணச் செலவு.

**மீனம்:** தானிய நிறைவு, வாகனச் சிறப்பு, மனையலங்காரம், ஆடை ஆபரணச் சிறப்பு.

யாழ். சோதிடர்
ச. அரியநாயகம

## புனித சின்னப்பர் திருவிழா

கொக்குவில் பொற்பதி வீதியில் அமைந்திருக்கும் புனித சின்னப்பர் ஆலயத் திருவிழா நாளை ஞாயிறுக்கிழமை காலை நடைபெறும். சனிக்கிழமை மாலை திருப்பலிப் பூசையுடன் ஆரம்பமாகிஞாயிற்றுக்கிழமை காலை திருப்பலியும் திருச்சொரூப பவனியும் இடம் பெறும். திருவிழா ஒழுங்கினை பங்குத் தந்தை ஏ.எவ்.குலாஸ் மேற்கொண்டுள்ளார்.

நினைவஞ்சலி

## திண்ணிய நெஞ்சன் பூபாலசிங்கம்

பூபாலசிங்கம் அவர்கள் சிறு வயதிலிருந்து புத்தகத் தொழிலில் இறங்கி வளம்பல கண்ட சீமான் 1945 ஆம் ஆண்டிலேயே அவர் நிறுவிய பூபாலசிங்கம் புத்தகசாலை மூன்று தடவை தீக்கிரையானது. ஐந்து கடைகள் எரிந்து சாம்பலாகின ஆனால் அவர் மனம் தளரவில்லை; கடையை மூன்று முறை புதுப்பித்து அமைத்தார். எண்ணிய கருமந்தன்னை விரைவில் எழிலுற முடிக்கும் வீரன் என்பதனைச் செயலில் காட்டினார்; வர்த்தகத் துறையினர்க்கு ஒரு வழிகாட்டியாக, அற்புதப் பணிபுரிந்து, அனைவரும் மதிக்கும் செம்மலாகத் திகழ்ந்தார். அவரின் திண்ணிய நெஞ்சும் எதையும் தீர்க்கமாய்ச் செய்யும் வன்மையும் பிறர்க்கு எடுத்துக்காட்டாக அமைந்தன. பூபாலசிங்கம் புத்தகசாலை தமிழறிஞர் சந்திக்கும் ஓர் அறிவுக் கூடமாகக் காட்சியளிக்கின்றது.

அறப்பணி, தமிழ்ப்பணி, சமூகப்பணி, சமயப்பணி, பொதுப் பணி எனப் பல்வேறு பணிகளிலும் தம்மை இணைத்துக் கொண்டு கடமையாற்றிய நல்ல பண்பாளர். வடபகுதியிற் பொதுவுடைமைக் கட்சி ஆரம்பித்த காலத்திலிருந்து ஆரம்ப உறுப்பினராக உழைத்து வந்தார். தீவுப் பகுதி மோட்டார் வள்ள சபையைத் தொடக்கிவைத்த பெருமையும் அவருக்குண்டு

ஆலயமெங்கிலும் அறப்பணி செய்ய ஆர்வமாய் உழைத்தவர் பூபாலசிங்கம் அவர்கள். நயினாதீவுக் கோயிலின் வளர்ச்சியிற் கண்ணுங் கருத்துமாயிருந்த இச்சிலர் நயினாதீவு அன்னதானச் சபை மூலம் செய்த தொண்டுகள் பல.

துணைவேந்தர்
க. வித்தியானந்தன்
(பூபாலசிங்கம் நினைவு மலரிலிருந்து)

## புலிகளின் கசையடி

கடந்த 20ஆம் திகதி மூளாய் (?) லைத்தீவில் இருந்து புதுக்குடியிருப்புக்கு சென்ற பஸ்ஸில் பயணம் செய்த ஒருவரிடமிருந்த சுமார் 6000 ரூபா பெறுமானமுள்ள புடவைப் பார்சலை அபகரித்துக்கொண்டு தப்பிச் சென்றவர் விடுதலைப்புலிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார் திருடப்பட்ட புடவைப் பார்சல் மீட்கப்பட்டு உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டதோடு திருடிய நபருக்கு விடுதலைப் புலிகளினால் கசையடித் தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது.

அணுவாயுத உருக்கு கடத்தலால்

# அமெ. பாகிஸ்தானுக்கு உதவிகளை நிறுத்த முடிவு?

(வாஷிங்டன்)

அண்மையில அமெரிக்காவில் இருந்து அணுவாயுதத்துக்கு பயன்படுத்தப்படும் உருக்கு மற்றும் சில உப உறுப்புக்கள் பாகிஸ்தானுக்கு கடத்தப்பட எடுத்த முயற்சிகள் அம்பலமானதையடுத்து, அமெரிக்கா பாகிஸ்தானுக்கு உதவி வழங்குவதை நிறுத்தலாம் என அமெரிக்க செனற்சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக அமெரிக்கா பாகிஸ்தானிடம் விளக்கம் கேட்டபோதும் பாகிஸ்தானிடம் இருந்து சரியான விளக்கம் தெரிவிக்கப்படவில்லை எனவும் அதனால், இம்முடிவு எடுக்கப்படலாம் என வெள்ளைமாளிகை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அமெரிக்க செனற் சபையில் பல உறுப்பினர்கள் இது குறித்து பாகிஸ்தான்மீது காரசாரமாக பேசியதுடன் அமெரிக்கா தனது ராணுவ மற்றும் உதவிகளை நிறுத்த வேண்டும் எனவும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஆசிய பசுபிக் பிராந்திய விவகாரங்களின் செனற்குழுவின் தலைவர் திரு. செலாஸ் பாகிஸ்தானுக்கு அமெரிக்க உதவி நிறுத்தப்பட வேண்டும் என செனற் சபைக்கு ஆலோசனை கூறியுள்ளார். செனற் சபையில் இது தொடர்பாக விவாதம் நடைபெறுகிறது.

இதேவேளை பாகிஸ்தானுக்கு ஆறு வருடங்களுக்குரிய நானூற்று இருபது கோடி டாலர் அமெரிக்க உதவியை நிறுத்துவதற்கு அமெரிக்கா சதி செய்து இவ்வாறான அணுவாயுத பொருள் கடத்தல் என்ற குற்றச்சாட்டை பாகிஸ்தான் மீது சுமத்துவதாக பாகிஸ்தான் கூறியுள்ளது.

ஹோர்மூஸ் நீரிணையில்

## குவைத் கப்பல்களுக்கு ஈரான் விமான மிரட்டல்

இரு குவைத் எண்ணெய்க் கப்பல்கள் ஹோர்மூஸ் நீரிணையை தாண்டிச் சென்று கொண்டிருந்தபோது நான்கு ஈரானிய யுத்த விமானங்கள் திடீரென அவற்றுக்கு அருகில் வந்து மிரட்டின.

இந்நேரம் குவைத் கப்பல்களுக்கு அருகில் பாதுகாப்பாக சென்ற அமெரிக்க யுத்தக் கப்பல் இந்த விமானங்களை எச்சரிக்கை செய்தபோதும் அவை தமது சாகஸங்களை செய்தன. எனினும் அந்த எச்சரிக்கையால் அவை உடன் திரும்பி விட்டன

இதேவேளை இந்தக்கப்பல்கள் பாஹ்ரெயினுக்கு நேற்று சென்று விட்டதாக அறிவிக்கப் படுகிறது.

பாஹ்ரெயினில் இருந்து குவைத்துக்கு செல்லும் வழியில் ஈரானின் கடற்கண்ணி வெடிகள் இருக்கலாம் எனவும் அஞ்சப்படுகிறது

## இன்று வெங்கடராமன் பதவியேற்பு

(புதுடில்லி)

பாரதத்தின் எட்டாவது ஜனாதிபதியாக தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட திரு. ஆர். வெங்கடராமனின் பதவி ஏற்கும் வைபவம் இன்று பாராளுமன்றத்தின் ஒருபகுதியில் சம்பிரதாய முறைப்படி நடைபெறும்.

## மீரற்றில் இனக்கலவரம் ராணுவம் அழைக்கப்பட்டது

(புதுடில்லி)

உத்தரப்பிரதேசத்திலுள்ள மீரற் நகர்ப்பகுதியில் மீண்டும் அந்த முஸ்லிம் இனக்கலவரங்கள் ஆரம்பமாகியுள்ளதால் அங்கு ஊரடங்குச்சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது

கடந்த மே மாதம் முஸ்லிம்களுக்கும், இந்துக்களுக்கும் இடையில் இடம்பெற்ற இக் கலவரங்கள் பின்னர் ஓரளவுக்கு அடங்கி அமைதி நிலவிவந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்து பிரமுகர் ஒருவர் தாக்கப்பட்டதாக வெளிவந்த வதந்தியால் நேற்று முன்தினம் பஸ்ஸில் சென்ற சிலர் வழியில் தாக்கப்பட்டனர் இதனால் எட்டுப்பேர் வரை மரணமானார்கள்.

இக்கலவரங்களினால் சில பஸ்கள், கடைகள் தீக்கிரையாக்கப்பட்டன. கலகக்காரரை கண்டதும் சுடுமாறு பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதுடன் இராணுவத்தினரும் சேவைக்கு அழைக்கப் பட்டுள்ளனர்.

இந்தோனிசியா பத்திரிகைக்கு பேட்டி

## ஆயுதக் குறைப்புக்கு தயார் சோவியத்தலைவர் அறிவிப்பு

(யகார்த்தா)

நடுத்தர ஏவுகணைகளை உலகில இருந்து முழுமையாக நீங்கிட சோவியத் யூனியன் தயாராக இருப்பதாக சோவியத்தலைவர் கொர்பச்சேவ் இந்தோனிஷியாவில் இருந்து வெளிவரும் பிரபல பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

இதே போல மேற்கு ஜேர்மனியில் அமெரிக்கா சோவியத்துக்கு எதிராக வைத்துள்ள ஏவுகணைகளை அகற்ற வேண்டும் எனவும் திரு. கொர்பச்சேவ் கூறியுள்ளார்.

பசுபிக் பகுதியிலும் சோவியத் தனது கடற்படை நடவடிக்கைகளை குறைத்துக் கொள்ளும் எனக் கூறிய சோவியத் தலைவர் அதேபோலவே அமெரிக்காவும் செய்ய வேண்டும் என்றார்.

கம்பூஷியா விவகாரம் தொடர்பாக குறிப்பிட்ட அவர் 1990-ம் ஆண்டுக்குள் அங்கிருந்து வியட்நாம் துருப்புக்கள் வெளியேறி விடுவதாக நாம் நம்புவதாகவும் கூறினார்

## பொலிஸ் சூட்டு ஐவர் பலி

(டாக்கா)

பங்களாதேஷில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததால் ஐவர் கொல்லப்பட்டனர்.

### தமிழர்களின் ..

—3ம் பக்கத் தொடர்ச்சி

தில் இந்திய உபகண்டத்திற்கு கூட ஒரு வழிவகுத்த மக்களாவோம்

இதுசம்பந்தமாக ஒருவரானற்றுப் போகது அவசியமானது.

'டைம்ஸ் ஒப் இந்தியா' வில் குறிப்பிட்டுள்ள ஒரு கட்டுரையில் சப்ஸ்டி ஆட்சியில்கூட இலங்கையின் இனப்பிரச்சினை தீர்க்க முடியாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது எவ்வாறு கியூபெக் மாகாணமும் கனடாவிலிருந்து பிரிந்துபோக வேண்டும் என்று கோரியதோ அதே போல் பிரியவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளது

எமது இனப்பிரச்சினை சம்பந்தமான தீர்வுக் கருத்துக்கள் எல்லாம் எமது போராட்டத்தை உரிமைகளை பாதுகாப்பவையாக அமைய வேண்டும். அவற்றை அடகு வைப்பதாக அமையக்கூடாது. டிசெ. 19 யோசனைகளைக்கூட இலங்கை ஏற்றுக்கொண்டுபின் மறுத்து விட்டது. இந்திய பிரதமர் ராஜீவ் தான் ஏமாற்றுப் பட்டுவிட்டதாகக் கூட கூறினார். இந்திய உபகண்டத்தின் பிரதமரை, ஒரு பாரம்பரிய பெரிய கலாசாரத்தை உடைய நாட்டின் பிரதமரை ஜே ஆர் ஏமாற்றி விட்டார். இவற்றை எல்லாம் உலக அரங்கிற்கு அம்பலப்படுத்த வேண்டும். ஆயுதத்தால் மட்டும் போராட்டம் நடத்த முடியாது எமது அரசியல் தளம் பலப்படுத்தப்பட வேண்டும்

நம் இன்று தீர்வுக்காக இரு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றோம் நவகாலனித்துவத்தினுடைய கொடிய ஒடுக்குமுறை எம்மை கவ்விப்பிடித்துள்ளது இதனால் எமது பிரச்சினை இந்தியாவோடு பின்னிப்பிணைந்துள்ளது இரண்டாவதாக இனவாத ஒடுக்குமுறை எமது தலைமேல் சுமத்தப்பட்டுள்ளது இரண்டுக்கும் தீர்வு காணப்படும் வகையில் எமது போராட்டம் முன்வைக்கப்பட வேண்டும் அதிலும் மிகமுக்கிய விடயம் நாம் இந்தியாவுக்கு மிக அருகில் இருப்பது ஆகும். அதை நம் கண்டபடி எதிர்க்க முடியாது

இந்தியாவுடன் நாம் நேரடியாக எதிர்க்காது ராஜதந்திரங்களை மிக உன்னிப்பாக கையாள வேண்டும். இதுவரையில நாம கையாண்டவை போதாது என்றே சொல்ல வேண்டும்.

சில நியாயங்களைக் காட்டி ஒரு தேசிய இனத்தை அடகு வைத்து போராட்டத்தை அழித்து விடுவது சரியல்ல. எமக்குள்ளே உள்ள சில தனிப்பட்ட முரண்பாடுகளுக்காக சரணாகதியடையக் கூடாது. எமது தேசிய இனத்தின் சுயாதீனத்திற்கான வாய்ப்புகளை நாம் செயலுருவாக்க வேண்டும் அதற்காக ஒரு அரசியல் தளம் வளர வேண்டும் அந்த அடித் தளத்தில் சரணாகதியற்ற ஒரு தீர்விற்கே நாம்போகவேண்டும்

# புலிகளை இந்தியா அங்கீகரித்ததாலேயே டில்லி அழைப்பை ஏற்றுப்போகின்றேன்

## புறப்படுமுன் பிரபா அளித்த பேட்டி

(அலுவலக நிருபர் கிறிஸ்ரி ரஞ்சன்)

"இந்திய அரசு என்னையும் எனது குழுவினரையும் யாழ்ப்பாணத்திற்கு தனது ஹெலிகொப்டர்களை அனுப்பி டில்லிக்கு அழைத்துள்ளமை தியாகப்போரில் வீர மரணமடைந்த 615 போராளிகளுக்கும், தமிழ்மக்களுக்கும் கிடைத்த மிகப்பெரிய கௌரவமாகவே நான் கருதுகின்றேன்" இவ்வாறு நேற்று சென்னைக்கு புறப்படுவதற்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே பிரபாகரன் யாழ்ப்பாண பத்திரிகையாளர்களுக்கு அளித்த சிறப்புப்பேட்டியில் தெரிவித்தார்.

திரு பிரபாகரன் ஈழத்தில் வைத்து பத்திரிகையாளர்களுடன் நடத்திய முதல் சந்திப்பாக இந்தப் பேட்டி அமைந்திருந்தது. விடுதலைப் புலி இயக்க முக்கியஸ்தர்களான யோகி, மாத்தயா, திலீபன், மன்னார் பிராந்திய தளபதி ஷ ஜான், காக்கா ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர். பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு சிரித்துக்கொண்டு, ஆரவாரமாகவும் அதேவேளை ஆழமாகவும் ஆணித்தரமாகவும் திரு. பிரபாகரன் பதிலளித்தார்.

"நான் தமிழகத்தில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வரும்போது இந்திய அரசு எம்மை




பிரபாவை அழைத்துச்செல்ல வந்த ஹெலிகப்டரின் 'பைலட்', அந்தரங்கமாக கப்டன் குப்தாவுடன் அளவளாவுகிறார்.

அங்கீகரித்துக் கூப்பிட்டால் மட்டுமே இந்தியாவுக்கு போவதெனவும், பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதெனவும் முடிவெடுத்திருந்தேன். நாங்கள் எமது கொள்கைகளில் கடுமையாக அதே நேரம் நிதானத்துடன் இருந்ததினால் தான் இன்று இந்தியா எம்மை அங்கீகரித்து, யாழ்ப்பாணத்திற்கு தனது படை விமானங்களை அனுப்பி அழைத்திருக்கின்றது நான் தமிழ்மக்களின் உண்மைப் பிரதிநிதியாகவே இந்தியா செல்கிறேன். நான் அரசியல்வாதியல்ல. மக்களின் விடுதலைக்காக போராடுபவன் போராட்டத்தை ஒரு நிகழ்ச்சியாகவே கருதுகின்றேன் நான் பதவிக்காக ஆசைப்படவில்லை. மக்களுக்காகவே நான் வாழ்கின்றேன்" என திரு பிரபாகரன் அப்பேட்டியில தெரிவித்தார்.

பத்திரிகையாளர்களின்கேள்விகளுக்கு அவர் பதிலளிக்கையில் "இந்திய அரசு பேச்சுவார்த்தைகள் தொடர்பான சில ஆரம்ப ஆலோசனைகளை மேற்கொள்வதற்கே எம்மை டில்லிக்கு அழைத்துள்ளது ஜனாதிபதி ஜெயவர்த்தனா எங்களை பிரிவினைவாதிகள், முரட்டுத்தனமானவர்கள் என உலகிற்கு காட்ட முற்படுகின்றார். இந்நிலையில் இந்திய அரசு விடுத்தநல்லெண்ண அழைப்பை நிராகரிக்காமல் நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம். எப்போதும் பலம்வாய்ந்த இயக்கம் ஒன்றே அங்கீகரிக்கப்படுவது வழக்கம்.

இந்த வகையிலேயே நாம் டில்லிக்கு அழைக்கப்பட்டிருக்கின்றோம. இப்பேச்சுக்களில் தமிழர் விடுதலைக் கூட்டணியோ அல்லது வேறு விடுதலை இயக்கங்களோ கலந்து கொள்ளுமா என்பதைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. அதைப்பற்றி தீர்மானிக்க வேண்டியது இந்திய அரசுதான்" எனத்தெரிவித்தார்.

"நாம் தமிழீழக் கோரிக்கையைக் கைவிடவில்லை. தமிழீழக் கோரிக்கைக்கு மாற்றுத்தீர்வு ஒன்றை அரசு சமர்ப்பித்தால் மட்டுமே அது பற்றி ஆராயப்படும். அப்படி ஒரு மாற்றுத்தீர்வை இலங்கை அரசினால முன்வைக்க முடியாது என்பதும் எமக்குத் தெரியும். இந்திய அரசும் எமது தமிழீழ கோரிக்கையை விரைவில அங்கீகரிக்க வேண்டிய சூழ்நிலை ஒன்று கட்டாயம் ஏற்படும். எவரது வற்புறுத்தலுக்காகவும் நாம் எம் மக்களின் விருப்பத்திற்கு மாறான எந்தத்தீர்வையும் ஏற்றுக்கொள்ளமாட்டோம் 30 வருட இனப்பிரச்சினை 30 நாட்களிலோ அல்லது 3 நாட்களிலோ தீர்ந்துவிடும் என எவரும் எதிர்பார்க்கக் கூடாது. நிரந்தர தீர்வு ஒன்றைத்தான் நாம் நம்புகின்றோம். முன்னர் ஜெயவர்த்தனாவுடன் பேசி காலத்தை வீணடித்து விட்டோம். இந்தவகையில் உண்மையாகவே தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்க இலங்கை அரசு விரும்பினால் அதற்கு முன்நிபந்தனையாக நாம விதிக்கும் சில நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டியது அரசின் பொறுப்பு".



இந்தியா புறப்படுவதற்கு முன்னர் தலைவர் பிரபாகரன் யாழ்ப்பாணப் பத்திரிகைகள் நான்கினதும் பிரதிநிதிகளைச் சந்தித்து பேசியபோது எடுக்கப்பட்டபடம். பிரபாகரனின் ஒரு புறத்தே வன்னித்தளபதி மாத்தயாவும், மறுபுறத்தே அரசியல் பிரிவுத் தலைவர் திலீபனும் அமர்ந்திருக்கின்றனர் தமிழீழம் வந்த பின்னர் பிரபாகரன் பத்திரிகையாளர்களைச் சந்தித்தது இதுவே முதற்தடவையாகும்.

இலங்கை அரசின் புதிய யோசனை பற்றி தனக்கு எதுவும் இப்போது தெரியாது என தெரிவித்த அவர், பிரதமர் ராஜீவ் காந்தியுடனான சந்திப்பின் பின்னர்தான் இது குறித்த மேலும் விபரங்களை தான் அறியக் கூடியதாக இருக்கும் எனவும் தெரிவித்தார்

"இப்போது எமது பிரச்சினை ஒரு சர்வதேசப் பிரச்சினையாக மாறிவிட்டது. இந்தியா எமது ஆயுதங்களை முன்னர் பறிக்கையில் நான் நினைக்கவில்லை, இந்தியா இவ்வளவு சீக்கிரத்தில் எம்மை அங்கீகரித்து தனது படை விமானங்களை அனுப்பி எம்மைப் பேச்சுக்கு அழைக்குமென்று இந்தப் பிரச்சினையில் இந்தியா இலங்கையுடன் தற்போது கடினமாக நடந்து கொண்டதினால் தான் ஜனாதிபதி ஜெயவர்த்தனா விரும்பியோ விரும்பாமலோ பேச்சுவார்த்தைக்கு வரவேண்டிய நிலைக்கு உள்ளாகி இருக்கின்றார் நான் இங்கிருந்து போகுமட்டும் தமிழீழம் தான் தீர்வு என நம்பியிருக்கின்றேன்" எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாய் உண்மையாய் தெளிவாய் யாழ்ப்பாண பத்திரிகைகள்தான் செய்திகளைப் பிரசுரிக்கின்றன இந்த வகையில் யாழ்ப்பாண பத்திரிகையாளர்களை கட்டாயம் சந்திக்கவேண்டும் என பல நாட்களாய் ஆவலாய் இருந்தேன் அந்த ஆசை இன்று நிறைவெய்துவது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன் எனவும் திரு. பிரபாகரன் குறிப்பிட்டார்.

# இடைக்காலத்து தீர்வுகள் பிரச்சினைக்குத் தீர்வல்ல

இந்திய பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தியின் விசேட அழைப்பின் பேரிலேயே நான் தமிழீழத்தை விட்டு உத்தியோகபூர்வமாக இந்தியா செல்கிறேன் 1972-ல் இருந்து நம் தமிழீழம் எனும் உயரிய இலட்சியம் குறித்து அயராது போராடி வருகிறோம. இவ்வுயரிய இலட்சிய போராட்டத்தை அளப்பெரும் தியாகங்களுடன் முன்னெடுத்து வரும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நீங்கள் காட்டிவரும் ஆதரவும் பங்களிப்பும் மகத்தானது சொல்லொண்ணாத் தியாகங்களும் நீங்கள் ஆற்றிவரும் பங்களிப்புமே இன்று போராட்டத்தை உன்னத நிலைக்கு வளர்த்துள்ளது. இன்று நான் தமிழ் மக்களின் பிரதிநிதியாக இந்திய மத்திய அரசால் வரவேற்கப்படுவதற்கு நீங்கள் எமது இயக்கத்துக்குக் காட்டிய முழு ஆதரவும் பங்களிப்புமே முதன்மையான காரணமாகும் தமிழ் மக்கள் என்மீதும் எம் விடுதலை இயக்கம் மீதும் கொண்டுள்ள நம்பிக்கை, விசுவாசத்தை நான் என்றும் மறந்துவிடப்போவதில்லை.

மேற்கண்டவாறு திரு. பிரபாகரன் நேற்று முற்பகல் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். இங்கு மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சிங்கள அரசுகளை நம்பி பழைய வலாறுகளால் தமிழீழ மக்கள் 30 வருடமாக ஏமாந்திருப்பது உலகறிந்த விடயம்.

### பிரபாவுடன்...

சென்றிருந்தார். திரு. பிரபாகரனுடன் விமானத்தில் திரு. பூரியும், கப்டன் குப்தாவும் சென்றிருந்தனர்.

திரு பிரபாகரன் நேற்றிரவே பிரதமர் ராஜீவைச் சந்திக்க ஏற்பாடாகியிருந்தது.

சென்னையில் பிரபாகரனை நிருபர்கள் சுற்றிவளைத்துக் கேள்விக்குமேல் கேள்வி தொடுத்தனராயினும், அவர்களால் அவரிடமிருந்து ஒன்றும் பெற முடியாமல் போய்விட்டது.

பிரதமர் ராஜீவ் காந்தியை சந்தித்த பின்புதான் இனப் பிரச்சினைக்கான சமரசப் பேச்சுவார்த்தைகளை தொடங்குவதுபற்றி எதுவும் கூற முடியும் என பிரபாகரன் கூறிவிட்டார்.

இன்று தமிழ்மக்கள் தம் இலட்சியத்தை வென்றெடுக்கும் ஓர் தலைமையை பெற்றிருக்கிறார்கள் என்பதை அறுதியிட்டுக் கூறுகிறேன். நீங்கள் எனக்களித்திடும் கடமையை நான் நேர்மையாகவும், உண்மையாகவும், உறுதியுடனும் செய்வேன் என நம்புகிறேன தற்காலத்தில் பேசப்பட்டுவரும் இடைக்காலத் தீர்வுகள் எமது பிரச்சினைகளின் தீர்வாக அமையாது. எனவே தமிழ்மக்களின் நிரந்தரமான, நிம்மதியான, சுபீட்சமான எதிர்காலத்தை உறுதிப்படுத்தும் நிரந்தர தீர்வுகாகவே நான் பாடுபடுகின்றேன். அத்தகு தீர்வு தமிழீழம் என்றே நம்புகிறேன்.

### பிரபாவின்..

கொண்ட நெல்லியடி முகாம் தாக்குதல் இம் மாதம் 5-ம் திகதி இடம்பெற்றது கடந்த நான்காண்டுகளில் இவர்களின் முக்கியமான வெற்றித்தாக்குதல்களெல்லாம் கூட்டுத் தொகை ஐந்திலேயே இடம் பெற்றது.

நேற்று முன்தினம் ஜூலை 23-ம் திகதியே பூரி, குப்தா ஆகியோர் ராஜீவின் கடிதத்தை பிரபாவிடம் கையளித்தனர். இதுவுங்கூட கூட்டுத் தொகை ஐந்துதான்

# திலீபன், யோகி, றெபர்ட் கடாபி, இம்ரானும் பயணம்

புலிகளின் தலைவர் பிரபாகரனுடன், அவர் பிரயாணம் செய்த ஹெலிகப்டரிலேயே இந்திய தூதரக செயலாளர் திரு பூரி கப்டன் குப்தா மற்றும் புலிகள் இயக்க முக்கியஸ்தர்களான திலீபன், யோகி, கடாபி, றெபர்ட், இம்ரான் ஆகியோரும், பிரபாகரனின் மனைவி மதிவதனி மகன் சார்ல்ஸ் அன்ரனி மகள் துவாரகா ஆகியோரும் சென்றனர்.

### ஹெலி மேலெழு...

காலை 9.15 மணிபோல் இந்திய தூதரகச் செயலர் திரு. எச் எஸ் பூரியும், பாதுகாப்பு அதிகாரி கப்டன் குப்தாவும் சுதுமலை அம்மன் கோவிலடிக்கு யாழ்நகரில் இருந்து காரில் கூட்டிவரப் பட்டனர். இவர்கள் முதலில் அங்குள்ள அம்மன் கோவிலில் வழிபாடு செய்தனர் கோவிலின் பிரதமகுரு சிவஸ்ரீ ச. மகேஸ்வரக்குருக்கள் இவ் இருவருக்கும் மாலை அணிவித்து மங்கல ஆராத்தியை நெற்றியிலிட்டார். அதன் பின்னர் 9.50 மணியளவில் இந்திய விமானப் படையின் முதலாவது ஹெலிகொப்டர் (Z2904) அங்கு தரையிறங்கியது அப்போது அங்கு குழுமியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து கரகோஷம் செய்தனர். இதன் பின்னர் ஹெலிகொப்டர்களை நோக்கி ஓடிய மக்கள் கூட்டம் அவற்றின் பைலட்டுக்களை

பிரபாகரன் குழுவினர் ஹெலிகப்டரில் ஏறியதும் 10 25 மணிபோல் Z 2904 மேலெழுந்துவட்டமிட்டு பாதுகாப்பு வழங்க பிரபாகரன் குழுவினரைத்தாங்கிய ஹெலிகப்டர் மேலெழுந்து மேற்குப்பக்கமாக பறந்து சென்றது.

### புதன்கிழமை ..

சாத்திடப்படவுள்ளதாகவும் ஏ. எப் பி மேலும் தெரிவித்தது

புதுடில்லியில் தற்பொழுது தங்கியுள்ள தூதுவர் டிக்ஸிற் இன்று கொழும்பு திரும்பியவுடன் பிரதமர் ராஜீவ் கொழும்பு வருவது பற்றி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும்.

### அம்மனின் ..

ஆலய குருக்கள் திரு பூரிக்கும் கப்டன் குப்தாவுக்கும் மலர்மாலை சூட்டி, பொட்டு இட்டு ஆசீர்வாதம் வழங்கினார். இதனால் சுதுமலை அம்மன் வரலாற்றில் பெயர்பெற்ற தெய்வமாகிவிட்டது

கட்டியணைத்து அவர்களுக்கு குளிர்பானங்களை வழங்கி தமது அன்பைத் தெரிவித்துக் கொண்டனர்.

இதன் பின்னர் பிரபாகரன் ஹெலிகொப்டரில் ஏறி, ஹெலிகொப்டர் மேலெழ ஆரம்பித்ததும் அங்கு குழுமியிருந்த மக்கள் பிரபா வாழ்க என கைகளை அசைத்து கோஷமிட்டு வாழ்த்தி அனுப்பினர்.

இப் பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் [பிறைவேற்] லிமிற்றெட் நிறுவனத்தினரால யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி, 62ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகப் பிரிவில் 25 07. 87 இல அச்சிட்டு வெளியிடப்பெற்றது.